**சுருக்கம்**

போக்குவரத்துத்துறை – அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளில் உயிரிழந்தோர்களது வாரிசுகளுக்கும் மற்றும் பலத்த காயமடைந்தோருக்கும் விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்குதல் – 2020–21–ஆம் நிதியாண்டில் ரூ.60,00,00,000/– (ரூ.30,00,00,000/– அரசின் பங்களிப்பாகவும், மற்றும் எஞ்சிய ரூ.30,00,00,000/– அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு நிதியாகவும்) விபத்து இழப்பீட்டுத் தொகை நிதித்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் (TDFC) வைப்பீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**போக்குவரத்து (அ) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்: 49**

**நாள் 19.03.2021**
**சார்வரி, பங்குனி 6**
**திருவள்ளுவர் ஆண்டு 2051**

**படிக்கப்பட்டவை:**

1) அரசு ஆணை (நிலை) எண்.183, போக்குவரத்து (அ) துறை, நாள் 19.7.2010.

2) அரசு ஆணை (நிலை) எண்.30, போக்குவரத்து (அ) துறை, நாள் 28.02.2014.

3) அரசு ஆணை (நிலை) எண்.16, போக்குவரத்து (அ) துறை, நாள் 22.02.2016.

4) அரசு ஆணை (நிலை) எண்.177, போக்குவரத்து (அ) துறை, நாள்.26.11.2019.

5) அரசு ஆணை (நிலை) எண். 224, நிதி (வரவு செலவு பொது–1) துறை, நாள். 31.03.2020.

*******

**ஆணை:**

அரசு போக்குவரத்து கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, விரைவாக இழப்பீட்டுத் தொகையினை வழங்குவதற்கு, விபத்து இழப்பீட்டுத் தொகை நிதித்திட்டத்தை உருவாக்கி, மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இதர இனங்களுடன் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசின் பங்காக ரூ.20,00,00,000/–யும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20,00,00,000/–யும் ஆண்டுதோறும் அளிக்க வேண்டும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. மேலே, பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், நீதிமன்றங்களால் பிடித்து வைக்கப்பட்ட வாகனங்களை விடுவிக்க கோரி, உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு வழக்குகளுக்கு விபத்து இழப்பீட்டுத் தொகையினை பயன்படுத்தலாம் என தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு சில நிபந்தனைகளுடன் அனுமதி

வழங்கப்பட்டு, அரசாணை (நிலை) எண்.183, போக்குவரத்து (அ) துறை, நாள் 19.07.2010–க்குத் திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

3. மேலே, பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2015–2016–ஆம் ஆண்டு முதல் அரசின் பங்களிப்பாக ரூ.30,00,00,000/–யும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.30,00,00,000/–யும் உயர்த்தி வழங்கி விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் செயல்படும் என ஆணையிடப்பட்டது.

4. மேலே, பார்வை 4–ல் படிக்கப்பட்ட அரசாணையில் 2019–2020–ஆம் நிதியாண்டில் ரூ.60,00,00,000/– (ரூ.30,00,00,000/– அரசின் பங்களிப்பாக மற்றும் எஞ்சிய ரூ.30,00,00,000/– அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு நிதியாகவும்) விபத்து இழப்பீட்டுத் தொகை நிதித்திட்டத்தில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் (TDFC) வைப்பீடு செய்வதற்கு ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

5. 2020–2021–ஆம் ஆண்டிற்கு, அரசின் பங்காக ரூ.30,00,00,000/– மற்றும் அனைத்து போக்குவரத்து கழகங்களின் பங்காக ரூ.30,00,00,000/–ம் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதித்திட்டத்திற்கு செலுத்தப்படவேண்டும். அதன்படி, அரசின் பங்களிப்பினைச் செலுத்துவதற்கு, 2020–21–ஆம் நிதியாண்டில் வரவு செலவு திட்ட மதிப்பீடு/இறுதி திருத்த மதிப்பீட்டில் ரூ.30,00,00,000/– நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் நிதித்திட்டத்தின்கீழ், 2020–2021–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த மதிப்பீட்டில் (FMA) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசின் பங்களிப்பு தொகையான ரூ.30,00,00,000/–ஐ (ரூபாய் முப்பது கோடி மட்டும்) காலாண்டு நிதியொதுக்க கட்டுப்பாடு தொடர்பாக வெளியிடப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.224, நிதி (வரவு செலவு பொது–1) துறை, நாள் 31.03.2020–க்கு தளர்வு அளித்து நிதி ஒப்பளிப்பு செய்யலாமென அரசு முடிவு செய்து அவ்வாறே இதன்வழி ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி–6–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:-

> "3055–00 சாலைப் போக்குவரத்து – 190 பொதுத்துறை நிறுவனங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் நிதியுதவி மாநிலச் செலவினங்கள் – AH விபத்து இழப்பீடு தொகை நிதித்திட்டத்திற்கான மானியம் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
>
> பழைய த.தொ.கு.3055–00–190–AH-0933"
> **IFHRMS த.தொ.கு.3055-00-190-AH-30903**

8. மேலே பத்தி–6ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரொக்கமாக வழங்காமல் கீழ்க்கண்ட கணக்குத்தலைப்பில் வைப்பீடு செய்யப்பட வேண்டும்:–

"K-வைப்பீடுகள் மற்றும் முன் பணங்கள் – (b) வட்டிபெறா வைப்பீடுகள்–8443–00– உரிமையியல் வைப்பீடுகள். 800–ஏனைய வைப்பீடுகள் BB – தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் வைப்பீடுகள்"

801. வரவுகள் – 02. வட்டி பெறாதவை
802- வழங்குதல்–02–வட்டி பெறாதவை

பழைய த.தொ.கு: 8443–00–800 BB – 000 A
IFHRMS த.தொ.கு: 8443–00–800 BB – 80102
பழைய த.தொ.கு. 8443–00–800 BB – 0000
**IFHRMS** த.தொ.கு: 8443–00–800 BB – 80202

9. அரசு சார்புச் செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை–9 அவர்கள் மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகைக்கான பட்டியல் தயாரித்து சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை–9–ல் சமர்ப்பித்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தில் (IFHRMS) உரிய சரிகட்டல்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசு சார்புச் செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை–9 அவர்கள் உரிய தொகையை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

10. மேற்படி திட்டத்திற்கு, 2020–2021–ஆம் ஆண்டிற்கான அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு தொகையான ரூ.30,00,00,000/–யினை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் செலுத்துமாறு அனைத்துப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

11. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.43909/பொ.ப–1/2020, நாள் 05.03.2021–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**
நிர்வாக இயக்குநர்கள், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள்.
இயக்குநர், சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை–113.
இணை மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை–2.
சம்பளக் கணக்கு அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை–79.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
அரசு சார்புச் செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை–9.
**நகல்:**
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலர், போக்குவரத்துத் துறை, சென்னை–9.
போக்குவரத்து (எப/ட்டி) துறை, சென்னை–9 (தொடர் நடவடிக்கைக்காக).
நிதி (பொ.ப. 1/ வ.செ.பொ–1/ பொ.ம.க.) துறை, சென்னை–9.
உள் (போக்குவரத்து) துறை, சென்னை–9.
தனி அலுவலர், தலைவர் அலுவலகம், போக்குவரத்துத் துறை, சென்னை–9

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

19/3/21

**பிரிவு அலுவலர்**